www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்:100

### பகுதி – I

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14x1=14

1. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டு சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது ?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்
2. யாருடைய ஆக்கிரமிப்பின் போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று ?
   அ) ஹெர்மன் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ
3. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது ?
   அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991
4. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.
   காரணம் : இக்காலக்கட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தை புறக்கணித்தது.
   அ) காரணம், கூற்று ஆகியவை சரி
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல
   இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை
5. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார் ?
   அ) K. காமராஜ் ஆ) C. இராஜாஜி இ) K. சந்தானம் ஈ) T. பிரகாசம்
6. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோள பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது _____
   அ) நீலகிரி ஆ) அகத்திய மலை இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்
7. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
   அ) சென்னை ஆ) சேலம் இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்
8. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் _____
   அ) பெங்களூர் ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்
9. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் _____ ஆகும்.
   அ) ஆனைமுடி ஆ) தொட்டபெட்டா இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்
10. பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டம் _____
    அ) சேலம் ஆ) தர்மபுரி இ) நீலகிரி ஈ) மதுரை
11. மாநில சபாநாயகர் ஒரு
    அ) மாநிலத் தலைவர் ஆ) அரசின் தலைவர்
    இ) குடியரசுத் தலைவரின் முகவர் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
12. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன ?
    அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
13. 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" வழங்கியவர் யார் ?
    அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான் இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்
14. வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறனை _____ என்கிறோம்.
    அ) வரிவிதிப்பு ஆ) நிதி உயர்வு இ) நிதீத்திறன் ஈ) கட்டணங்கள்

### பகுதி – II

**II எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.**
**வினா எண் 28க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** 10x2=20

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?
16. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை ?
17. தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.
18. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

19. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.
21. இந்தியாவின் தோட்டப்பயிர்களைக் குறிப்பிடுக.
22. பன்னாட்டு வணிகம் – வரையறு.
23. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
24. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக.
25. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை ?
26. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.
28. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் வரையறு ?

## பகுதி – III 10x5=50

**III ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 42க்கு கட்டாயம் விடையளிக்க)**

29. அ) போயர் ______ என்றும் அழைக்கப்பட்டனர்.
    ஆ) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ______ ஆவார்.
    இ) சாத்தனூர் அணை ______ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது ?
    ஈ) ______ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
    உ) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ______
30. முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி ?
31. 1857 ஆம் ஆண்டின் பெரும்புரட்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும் ?
32. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
33. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி ?
34. அ) வேறுபடுத்துக.
    1) வானிலை – காலநிலை
    2) வண்டல்மண் – கரிசல் மண்
    ஆ) காரணம் கூறுக.
    1) மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை
35. தமிழ்நாட்டில் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36. நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் சிக்கல்கள் யாவை ?
37. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி ?
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக்.
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. கீழ்க்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக.
    1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட ஏதேனும் ஐந்து முக்கிய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்**
    1) மொராக்கோ 2) ஜெர்மனி 3) சான்பிரான்சிஸ்கோ 4) ஹிரோஷிமா 5) ஹவாய் தீவுகள்

## பகுதி – IV 2x8=16

**IV பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

43. அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீர போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
    *(அல்லது)*
    ஆ) இந்தியாவின் பிரிவினைக்கு பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.
44. அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்**
    1) தக்காண பீடபூமி 2) மலைக்காடுகள் 3) மகேந்திரகிரி
    4) காவிரி டெல்டா 5) மன்னார் வளைகுடா 6) பாமீர் முடிச்சு
    7) சென்னைக்கும் டெல்லிக்கும் செல்லும் இரயில் வழி பாதை 8) ஹிராகுட் அணை
    *(அல்லது)*
    ஆ) **கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்**
    1) கன்னியாகுமரி 2) வனவிலங்கு சரணாலயம் (ஏதேனும் ஒன்று) 3) பாக்ஜலசந்தி
    4) குற்றாலம் நீர்வீழ்ச்சி 5) விமான நிலையம் ஒன்று 6) காஞ்சிபுரம் 7) சென்னை 8) வைகை நதி

***/***

Padasalai.Net



Scanned with CamScanner